விடுபட்ட சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

## கற்பனை கட்டுரை

அப்பா வாங்கித்தந்த ஆங்கில மர்மக் கதை புத்தகம் ஒன்றனை அன்றுதான் வாசித்து முடித்தேன். அடேயப்பா! ________________ எத்தனை விநோதங்கள்....

எத்தனை மர்மங்கள்.... என் மனத்தில் ஓர் ___________________ தோன்றியது. எனக்கு ஒரு விநோத மேசை கிடைத்தால்... ஆம்! எனக்கு _________________ மேசை கிடைத்தால் ஒவ்வொரு நாளும் உண்ணும் நேரத்தின் போது பலவகையான ___________________ அம்மேசைமீது தயாராக இருக்கும்படி செய்வேன். இதனால்,தினமும் ஓய்வில்லாமல் வீட்டு வேலைகளைச் செய்யும் என் ___________________ சற்று ஓய்வு கிடைக்குமல்லவா!

என் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து _________________ உணவுகளைச் சுவைக்க வேண்டும். உண்டபின் விநோத மேசை மீண்டும் முன்பு போல காட்சியளிக்க வேண்டும். நான் விரும்பிய ________________ எல்லாம் என் விநோத மேசை உருமாற வேண்டும். நான் பள்ளி செல்லும்போது என் விநோத மேசைமீது ____________________ பறந்து செல்ல வேண்டும். பள்ளியை அடைந்ததும் விநோத மேசை தனது ________________ மடக்கிக் கொள்ள வேண்டும். இதனால்,நான் வாகன நெரிசலில் சிக்கிக் கொண்டு தவிக்க நேரிடாது அல்லவா!

ஓய்வுநேரத்தில் என்னை ஏற்றிக்கொண்டு என் விநோத மேசை வானத்தில் பறக்க வேண்டும். இறைவன் படைத்த ________________ நான் கண்டு நான் இரசிக்க வேண்டும். எனக்குக் கிடைத்த இந்த விநோதமான மேசையைக் கண்ணுங்கருத்துமாய் நான் காத்திட வேண்டும்.

| | | |
|---|---|---|
| உருவத்தில் | இயற்கை | விநோத |
| இறக்கைகளை | எண்ணம் | தாயாருக்கு |
| அறுசுவை | கதையில் | உணவுகள் |
| அமர்ந்து | | |